DEPOSITION OF WITNESS
IN THE COURT OF JUDICIAL MAGISTRATE,
DEVAKOTTAI

**C.C.No.152/2022**

Deposition of witness for Prosecution அ.சா.1

| | | |
|---|---|---|
| Name | : | கனகவள்ளி |
| Father/Husband Name | : | கமலதாசன் |
| Village | : | |
| Taluk | : | |
| Calling | : | |
| Age | : | |

Solemnly affirmes to condition with the provisions of Law Act 1873 day of 27.01.2026

எதிரிகள் ஆஜர்

சாட்சி சத்தியப்பிரமாணம் செய்து வைக்கப்பட்டார்.

**<u>முதல் விசாரணை:</u>**

நான் மேல்வாக்கோட்டையில் குடியிருந்து வருகிறேன். ஆஜர் எதிரிகளை தெரியும். கடந்த 27.01.2022 ம் தேதி காலை 6 மணிக்கு என் வீட்டில் இருந்தபோது நெல் கொட்டுவதற்காக சாணம் தெளித்து கொண்டிருந்தேன். என் வீட்டு வாசலும் எதிரிகள் வீட்டு வாசலும் ஒரே வீடு, ஒரே வாசலாக அடுத்தடுத்து உள்ளது. நான் சாணம் தெளித்ததால் எதிரிகளுடன் பிரச்சனை வந்தது. 1ம் எதிரி என்னை கம்பை வைத்து என் இடது பக்க கையிலும், இடது பக்க தொடையிலும் அடித்து மிதித்தார். அதன்பிறகு 2ம் எதிரி பக்கெட்டால் முதுகில் அடித்துவிட்டு பக்கெட்டை குழந்தைமீது எரிந்துவிட்டார். பிறகு ஆட்கள் கூடவும் அவர் போய்விட்டார். பிறகு நான் சிவகங்கை அரசு மருத்துவமனைக்கு சென்றேன். பிறகு போலீசாரிடம் புகார் கொடுத்தேன். என்னிடம் காண்பிக்கப்படும் புகார் நான்

கொடுத்ததுதான். (**மேற்படி புகார் அ.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது.**) போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**<u>எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை</u>:**

நான் முதல் விசாரணையில் சொன்னதுதான் போலீசார் விசாரணையிலும் சொன்னேன் என்றால் சரிதான். நான் முதல் விசாரணையில் சொன்னதைதான் புகாரிலும் குறிப்பிட்டேன் என்றால் சரிதான். புகாரை திருவேகம்பத்தூர் போலீசார் எழுதினார்கள். நானும் எதிரிகளும் உறவினர்கள் என்றால் சரிதான். எனக்கும் எதிரிகளுக்கும் அடிக்கடி பிரச்சனை வரும் என்றால் பேசும்போது வாக்குவாதம் ஆனால் இந்த அளவிற்கு சென்றது இல்லை. சம்பவம் நடக்கும்போது யார் யார் இருந்தார்கள் என்றால் பக்கத்து வீட்டில் உள்ளவர்கள் இருந்தார்கள், பெயர் தெரியவில்லை. சம்பவம் 15 முதல் 20 நிமிடங்கள் நடந்திருக்கும். சம்பவத்தின்போது பயன்படுத்தியதாக சொல்லப்படும் கம்பு மற்றும் பக்கெட்டை நான் போலீசாரிடம் ஒப்படைத்தேனா என்றால் நான் ஒப்படைக்கவில்லை நான் மருத்துவமனைக்கு சென்று விட்டேன், போலீசார் சம்பவ இடத்தை பார்வையிட்டார்கள். பக்கெட்டை குழந்தை மீது எறிந்ததாக புகாரிலும் போலீசார் விசாரணையிலும் சொல்லவில்லை என்றால் சரிதான். உண்மையில் சம்பவம் நடந்திருந்தால் போலீசார் விசாரணையில் குழந்தையை அடித்ததை சொல்லிருப்பேன் என்றால் சரியல்ல, நான் மயக்கத்தில் இருந்ததால் என்னிடம் விசாரிக்கும்போது என்னை அடித்ததை பற்றி மட்டும் கேட்டார்கள், அதனால் நான் என்னை அடித்ததை கூறினேன். எனக்கும் எதிரிகளுக்கும் இடையே முன்விரோதத்தின் அடிப்படையில் கொடுக்கப்பட்ட பொய்யான புகார் என்றால் சரியல்ல. நான் புகார் கொடுக்கும்போது மயக்க நிலையில் இருந்தேனா என்றால் கொஞ்சம் மூச்சுத்திணறல்போல் இருந்தது. அதன்பிறகு எம்.ஆர்.ஐக்கு அழைத்துச்சென்றார்கள். நான் சொன்னதுபோல் எதிரிகள் என்னை அடிக்கவில்லை என்றால் சரியல்ல. சம்பவ இடத்தில் இருந்து சிவகங்கை செல்ல எவ்வளவு நேரம் ஆகும் என்றால் சுமார் 1 மணிநேரம் ஆகும். மருத்துவமனைக்கு சென்றபோது நேரம் என்ன இருக்கும் என்றால் சுமார் காலை 8, 9 மணி இருக்கும். மருத்துவமனையில் 5 நாட்கள் சிகிச்சை பெற்றேன்.

## மறு விசாரணை:

சாட்சியால் திறந்த நீதிமன்றத்தில் சொல்லப்பட்டு என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக்காண்பிக்கப்பட்டு அவரால் சரி என்று ஒப்புக் கொள்ளப்பட்டது.

S/d..D.Poornima, B.A.,B.L(Hons).,L.L.M.,
குற்றவியல் நடுவர்,
தேவகோட்டை.

# DEPOSITION OF WITNESS
# IN THE COURT OF JUDICIAL MAGISTRATE,
# DEVAKOTTAI

**C.C.No.152/2022**

Deposition of witness for Prosecution அ.சா.2

| | | |
|---|---|---|
| Name | : | ராஜேந்திரன் |
| Father/Husband Name | : | அழகுதேவர் |
| Village | : | |
| Taluk | : | |
| Calling | : | |
| Age | : | |

Solemnly affirmes to condition with the provisions of Law Act 1873 day of 27.01.2026

எதிரிகள் ஆஜர்

சாட்சி சத்தியப்பிரமாணம் செய்து வைக்கப்பட்டார்.

<u>**முதல் விசாரணை:**</u>

நான் மேல்வாக்கோட்டையில் வசித்து வருகிறேன். சம்பவம் பற்றி எனக்கு எதுவும் தெரியாது. போலீசார் விசாரிக்கும்போதும் சம்பவம் பற்றி எதுவும் தெரியாது என்றுதான் சொன்னேன்.

(அரசுத் தரப்பு வழக்கறிஞர் சாட்சியை பிறழ் சாட்சியாக அறிவிக்கக் கோரி அனுமதி கேட்டதன்பேரில் இந்நீதிமன்றம் அனுமதி வழங்கப்பபட்டது.)

<u>**அரசு தரப்பில் குறுக்கு விசாரணை:**</u>

கடந்த 31.01.2022 ம் தேதி திருவேகம்பத்தூர் காவல் நிலைய சார்பு ஆய்வாளர் விசாரணை செய்தபோது கடந்த 27.01.2022 ம் தேதி காலை 6 மணிக்கு அ.சா.1 சாணம் தெளித்து கொண்டிருந்தபோது 1,2 எதிரிகள் அ.சா.1 ஐ அசிங்கமாக திட்டினார்கள் என்றும் 1 ம் எதிரி கம்பால் அ.சா.1 ஐ இடது பக்க தொடை, இடது பக்க தோள்பட்டையில்

அடித்தார் என்றும், 2 ம் எதிரி அவரை அடித்துக்கொள்ளுங்கள் என்று சொன்னதாக போலீசார் விசாரணையில் கூறிவிட்டு எதிரிகள் உறவினர்கள் என்பதால் பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**<u>எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை: இல்லை</u>**

**<u>மறு விசாரணை: இல்லை</u>**

சாட்சியால் திறந்த நீதிமன்றத்தில் சொல்லப்பட்டு என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக்காண்பிக்கப்பட்டு அவரால் சரி என்று ஒப்புக் கொள்ளப்பட்டது.

S/d..D.Poornima, B.A.,B.L(Hons).,L.L.M.,
குற்றவியல் நடுவர்,
தேவகோட்டை.

DEPOSITION OF WITNESS
IN THE COURT OF JUDICIAL MAGISTRATE,
DEVAKOTTAI

**C.C.No.152/2022**

Deposition of witness for Prosecution அ.சா.3

| | | |
|---|---|---|
| Name | : | தங்கையா |
| Father/Husband Name | : | சுப்பிரமணியன் |
| Village | : | |
| Taluk | : | |
| Calling | : | |
| Age | : | |

Solemnly affirmes to condition with the provisions of Law Act 1873 day of 27.01.2026

எதிரிகள் ஆஜர்

சாட்சி சத்தியப்பிரமாணம் செய்து வைக்கப்பட்டார்.

**முதல் விசாரணை:**

நான் மாராத்தூரில் வசித்து வருகிறேன். கடந்த 31.01.2001ம் ஆண்டு மேல்வாக்கோட்டையில் வைத்து திருவேகம்பத்தூர் போலீசார் சம்பவ இடமான அ.சா.1ன் வீட்டை பார்வையிட்டு படம் போட்டுவிட்டு ஒரு மனு எழுதி என்னிடம் கையொப்பம் வாங்கினார்கள். பார்வை மகஜரில் உள்ள 1வது கையொப்பம் என்னுடையதுதான்.(**மேற்படி பார்வை மகஜர் அ.சா.ஆ.2 ஆக குறியீடு செய்யப்படுகிறது**) இது சம்பந்தமாக போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை:**

அ.சா.1 என் மகள். அ.சா.1 கேட்டுக்கொண்டதற்கு ஆதரவாகவும், போலீசார் கேட்டுக்கொண்டதற்கு ஆதரவாகவும் பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. நான் வெள்ளை பேப்பரில்தான் கையொப்பம் போட்டேன் என்றால் சரியல்ல.

எனக்கு எழுத படிக்க தெரியுமா என்றால் கையொப்பம் மட்டும்தான் போட தெரியும். அ.சா.ஆ.2 ல் என்ன உள்ளது என்று தெரியுமா என்றால் போலீசார் படித்து காண்பித்தார்கள். நான் காவல் நிலையத்தில் வைத்துதான் கையொப்பம் போட்டேன் என்றால் இல்லை.

**<u>மறு விசாரணை: இல்லை</u>**

சாட்சியால் திறந்த நீதிமன்றத்தில் சொல்லப்பட்டு என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக்காண்பிக்கப்பட்டு அவரால் சரி என்று ஒப்புக் கொள்ளப்பட்டது.

S/d..D.Poornima, B.A.,B.L(Hons).,L.L.M.,
குற்றவியல் நடுவர்,
தேவகோட்டை.